Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

.. உங்கள் சத்துருக்களைச்
**சிநேகியுங்கள்;**
உங்களைப் பகைக்கிறவர்களுக்கு
**நன்மை செய்யுங்கள்.**
– லூக்கா 6:27

.. மனுஷனுடைய
**சத்துருக்கள்**
அவனுடைய
**வீட்டார்தானே.**
- மீகா 7:6

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

VOL . 5 ISSUE . 4 தனிப்பிரதி ரூ 20/= நவம்பர் 2011



# சத்துருக்கள் யார்?



**உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்** (லூக்கா *6:27).*

சத்துருக்கள் என்றாலே, எதிர்த்து நிற்பவர்கள் அல்லது பகைப்பவர்களாகும். தன் மீது வெறுப்பு கொண்டுள்ள மற்றும் தனக்கு தீமை செய்பவனே சத்துரு எனப்படுவான். திருடன் , கொலைக்காரன், மற்றும் சண்டை போடுபவன் சத்துருவாவான். இவையெல்லாம் மேலோட்டமான பார்வையில் தென்படும் காரியங்களாகும். சற்று ஆழமாக இந்தக் காரியத்தைக் குறித்து நாம் வேதத்தின் அடிப்படையில் தியானிப்போம்.

எல்லாக் காரியங்களுக்குமே நமக்கு முன்னுதாரணம் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. வேதத்திலுள்ள எந்தக் காரியத்தையும் நமது மனித அறிவினாலே அறிந்துக் கொள்ளக்கூடாது. இயேசு கிறிஸ்து அந்த குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து என்ன சொல்லுகிறார் என்பதை பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்தில் உணர்த்த வேண்டும். அதுவே சரியான தெரிந்து கொள்ளுதலாகும்.

சத்துருவை நேசி என்று கர்த்தர் குறிப்பிடுவதில், முதலாவது சத்துரு என்று யாரை அவர் குறிப்பிடுகிறார் என்று அறிந்து கொள்ள வேண்டும். கர்த்தர், சத்துரு என்று சொல்லும்போது, முதலாவதாக சாத்தானைக் குறிப்பிடுகிறார். பின்பு சாத்தானுக்கு இடங்கொடுக்கும் மனிதர்களை குறிப்பிடுகிறார். சர்வத்தையும் சிருஷ்டித்த தேவனை எதிர்த்து நிற்பதே சாத்தானின் வேலையாகும். தேவனுக்கு கீழாக இருந்த கேரூப் என்ற தேவதூதன் தேவனுடைய ஸ்தானத்தைப் பிடிக்க ஆசைப்பட்டான். அவன்தான் சாத்தான். அவன் கர்த்தர் சிருஷ்டித்த ஜனத்தை ஆளுகை செய்ய இச்சிக்கிறான். ஜனங்களை தன்பக்கம் இழுப்பதற்காக அவர்களை பாவத்தில் விழச் செய்து பரிசுத்தமான தேவனுக்கு எதிரிகளாக்குகிறான். அன்பு எங்கே உண்டோ, அங்கே தேவன் இருக்கிறார். இது சாதாரண மனித அறிவிலிருந்து வரும் அன்பல்ல. அறிவிலிருந்து வரும் அன்பு வெறும் கிரியைதான். **பரிசுத்த ஆவியினாலே ஒருவன் அபிஷேகிக்கப்படும்பொழுது, அவனுடைய இருதயத்திற்குள் தேவனுடைய அன்பு வருகிறது** (ரோமர் 5:5). இதுதான் தன்னைப்போல மற்றவனையும் நேசிக்கும் அன்பாகும். இது இருதயத்திலிருந்து வரும் அன்பாகும்.



சத்துரு என்று சொல்லும்போது, அன்பில்லாதவனே. ஒருவனுக்கு அன்பிருந்தால், அவன் பாவம் செய்யமாட்டான். இப்படிப்பட்ட அன்பில்லாத ஒருவனிடத்தில் மெய்யான அன்பை நாம் வெளிப்படுத்துவதன் மூலம், தேவன் தமது அன்பை அவனிடத்தில் வெளிப்படுத்துகிறார். அவனுடைய மனசாட்சியைக்கொண்டு அவனுக்குள் பேசுகிறார். எப்படியென்றால், நாம் இவர்களுக்கு இவ்வளவு துரோகம் செய்தும், நம்மை இவர்கள் இவ்வளவாய் நேசிக்கிறார்களே, இது எப்படி சாத்தியப்படுகிறது என்று அவனை யோசிக்க வைக்கிறார். அந்த அன்பைக் குறித்து அவனை சிந்திக்க வைக்கிறார். இதின் முடிவாக, பதிலாக தம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறார். பகைக்கிற நம்மை நேசிக்கிறார்களென்றால், இது ஒரு மனித அறிவினால் செய்யப்படும் கிரியை அல்ல. இவர்களுக்குள் இருக்கும் தேவனுடைய அன்பே இவர்களை நம்மிடத்தில் இப்படியாக அன்பு கூரக் செய்கிறது என்று உணர்ந்து கொள்கிறான். சத்துருவை நாம் நேசிக்கும்பொழுது, அவன் மனிதர்களாகிய நம்மைப் பார்ப்பதோ, நம்மைப் பற்றி நல்ல எண்ணம் கொள்வதோ காரியமல்ல. நம்மில் இயேசுவைக் காண்பதே காரியமாகும். இதுதான் கிறிஸ்தவ ஜீவிதமாகும்.

அறியாமல் பாவம் செய்கிறவர்கள் உண்டு.இப்படிப்பட்டவர்கள் இது பாவம் என்று அறியும்பொழுது பாவத்தை விட்டு விலகுவார்கள். சிலர் பாவம் என்று அறிந்தும் பாவம் செய்வார்கள். இது சுய இச்சையினால் வருவதாகும். சுய இச்சையை அடக்கமுடியாமல் பாவம் செய்கிறார் கள். திருடுவதும், கொலை செய்வதும், விபச்சாரம் செய்வதும், சுய இச்சையினாலேயே. மனிதனால் பாவத்தை மேற்கொள்ள முடியாததாலேயே, தேவனே மாம்சத்தில் இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமிக்கு வந்து மனிதனுடைய பாவங்களுக்காக அவர் இரத்தம் சிந்தி பாவத்தை மேற்கொண்டு விடுதலை வாங்கித் தந்தார்.

பாவம் செய்கிறவன் தேவனுக்கு விரோதமாக நிற்கிறான். தேவனிடத்திலும், மற்ற மனுஷரிடத்திலும் அன்பு கூராதவனே பாவம் செய்கிறான். ஒருவன், தன்னைப்போல மற்றவர்களையும் நேசித்தால், அவன் பாவம் செய்யமாட்டான். இதை அப்போஸ்தலனாகிய பவுல், கலாத்திய சபைக்கு எழுதின நிருபத்தில் இப்படியாகக் குறிப்பிடுகிறார்: **உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக** (கலாத்தியர் *5:14).* அன்பு இருக்கும் இடத்தில் தேவன் இருப்பார். அங்கு பாவம் இருக்காது.

சத்துருவையும் நேசி என்று நமது அருமை இரட்சகர் இயேசுகிறிஸ்து சொல்லுவது, அன்பை பிரதானமாக குறிப்பிடுகிறார். எப்பேர்ப்பட்ட கடினமான சூழ்நிலையிலும், கடினமான மனிதர்களிடமும் அன்பாயிரு என்று நமக்கு கட்டளையிடுகிறார். கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்று பதிலளிக்காதே என்பதையே வலியுறுத்துகிறார். அவர் எப்படி பாவிகளை நேசித்தாரோ அப்படியே நம்மையும் பாவிகளை நேசிக்கச் சொல்லுகிறார். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காண்பி என்றும், ஒரு மைல் வர பலவந்தம் பண்ணினால் இரண்டு மைல் தூரம் கூடப்போ என்றும், மேல் வஸ்திரத்தைக் கேட்டால், உள்வஸ்திரத்தையும் சேர்த்துக்

கொடு என்றும், நம் கர்த்தர் சொல்லுவது நாம் அன்பை எவ்வளவாய் வெளிப்படுத்த வேண்டும் என்பதே.

உன்னை நேசிக்கிறவனையே நீயும் நேசித்தால் அதில் அவருடைய அன்பு இல்லை என்கிறார். உன்னை பகைக்கிறவனையும் நேசி என்கிறார். அப்பொழுது தான் அவரிலிருக்கும் அந்த மெய்யான, பரிபூரணமான, தெய்வீக அன்பு நம்மிலிருந்து வெளிப்படும் என்று வலியுறுத்துகிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பைக் குறித்து தியானித்தோமானால், நம்முடைய மனக்கண்கள் திறக்கப்படும். தமக்கு எதிராக பாவம் செய்த நம்மை அழிக்க அல்ல, மனந்திரும்பவே அழைக்க வந்தார். அவர் பாவிகளை நேசித்தார். பாவத்தை வெறுத்தார். பாவம் மனிதனை விட்டு அகல வேண்டுமென்று வாஞ்சித்தார். அதற்காகவே இந்த பூமிக்கு வந்து பாடனுபவித்தார். பரிசேயரையும், சதுசேயரையும் அவர் வெறுக்கவில்லை. பாவத்தில் உழன்று கொண்டிருந்த அவர்களை கண்டித்தார். அப்படியென்றால் நாமும் இயேசுவைப்போல பாவிகளிடத்தில் அன்புகூர வேண்டும். ஆனால், அதே நேரத்தில் அவர்களுடைய பாவத்தை கண்டித்து உணர்த்த வேண்டும். அவர்கள் மற்ற மனுஷர்களுக்கு எதிராக பாவம் செய்வது என்பது இயேசுவுக்கு எதிராக செய்வதாகும். நாம் நியாயாதிபதிகள் அல்ல. வேதத்தின் வார்த்தை, நியாயத்தீர்ப்பு நாளிலே அவர்களை நியாயம் தீர்க்கும். அவர்கள் பாவியாயிருக்கும் பட்சத்தில் நரகத்திற்கு போக நேரிடும். பாவத்தினால் ஒரு ஆத்துமா நரகத்திற்கு நேராக போவதை நாம் கண்டும், அதை அவர்களுக்கு உணர்த்தாமல் இருந்தோமானால், அந்த ஆத்துமாவிற்கான கணக்கை நாம் கர்த்தரிடத்தில் ஒப்புவிக்க வேண்டும். ஒருவனும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல என்றும், ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட்டாலும் பரலோகம் களிகூரும் என்றும் வேதம் சொல்லுகிறது. இயேசு தரும் இரட்சிப்பே, ஒரு ஆத்துமாவை பாதாளத்திற்கு விலக்கி, பரலோகத்துக்கு இட்டுச் செல்லும்.

இயேசுவையும், பாவமன்னிப்பையும், மகத்துவமான இரட்சிப்பையும் அறிந்த நாம், பாவம் செய்கிறவன் பாவத்தை விட்டு இயேசுவண்டை வர உதவி செய்வதே மேலான அன்பாகும். நம்முடைய அன்பு இயேசுவினுடைய அன்பைப்போல இருக்க வேண்டுமானால், சத்துருவையும் நேசித்து, அவன் பாவத்தை விட்டு விட இயேசுவைப் பற்றியும், வேதத்தைப் பற்றியும் அவனுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக இயேசு இதையே செய்தார். இப்பொழுது இயேசுகிறிஸ்து இந்த பூமியில் இருந்தாரென்றாலும் இதையே செய்வார்.

இன்று அநேகர் சத்துருவையும் நேசிக்கிறேன் என்று சொல்லி, சுயமாக அன்பு கூருகிறார்கள். இரட்சிப்பைப் பற்றி சொல்வதில்லை. அப்படியென்றால் அங்கு இயேசு இல்லை. இரட்சிப்பு கர்த்தருடையது.ஆனால், இரட்சிப்பை பற்றி பேசவேண்டியது மனிதர்களாகிய நம்மேல் விழுந்த கடமை. இந்த இரட்சிப்பிற்காகவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஊழியம் செய்தார். இன்றைக்கு ஊழியங்கள் அதற்காகவே நடக்கின்றன. வேதமே சத்தியம். சத்தியத்தை சத்தியமாக அறிந்து கொள்ளவேண்டும். அப்பொழுது நம் மனக்கண்கள் திறக்கப்படும், நாம்



இதுவரை அறியாத காரியங்களை நாம் வேதத்தில் காண்போம். ஒரு மனுஷனோடு நாம் அன்பாயிருப்பதும், அந்த மனுஷன் நம்மோடு அன்பாயிருப்பதும் உண்மையானதாக இருக்க வேண்டும். ஒருவன் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அன்புகூர வேண்டும் என்பதையே சத்துருவை நேசி என்று கூறுகிறார்.

வேதத்திற்கு நாம் சுயமாக நம்முடைய அறிவிலிருந்தும், ஞானத்திலிருந்தும், அனுபவத்திலிருந்தும் விளக்கம் சொல்லக் கூடாது. பரிசுத்த ஆவியினால் எழுதப்பட்ட வேத வார்த்தைகளை *(2 தீமோத்தேயு 3:16)* பரிசுத்த ஆவியானவர் போதிக்கிற வார்த்தைகளாலேயே போதிக்கவேண்டும். **அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்** *(1 கொரிந்தியர் 2:13)*. பரம ஞானத்தினால் எழுதப்பட்ட வார்த்தைகளை உலக ஞானத்தினால் விளக்கவோ, போதிக்கவோ கூடாது.

வேதத்தில் உள்ள வசனத்தை நம் மாம்ச கண்களினால் மேற்போக்காக பார்க்காமல், எந்த நோக்கத்தோடு கர்த்தர் அந்த வசனத்தை பேசுகிறார் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இதுதான் வேதத்தை தியானிப்பது என்பதாகும்.

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் இருந்த காலத்தில் ஜனங்களுக்கு போதனை செய்தார். இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார். எல்லோரிடமும் எப்போதும் அன்பாக பேசிக் கொண்டிருக்கவில்லை. போதிக்க வேண்டிய நேரத்தில் போதித்தார்; கண்டிக்க வேண்டிய வேளையில் கண்டித்தார்; அன்பாயிருக்க வேண்டிய நேரத்தில் அன்பாயிருந்தார். மக்கள் செய்த தவறுகளை சுட்டிக் காட்டினார். மக்கள் அந்த பாவத்திலிருந்து விடுபட்டு, பரிசுத்தமாக வாழ விரும்புகிறார். பாவத்தை செய்து நரகத்துக்கு போவதை தடுக்கவே அவர்களது பாவத்தை சுட்டிக் காட்டினார். ஒவ்வொருவரும் தங்கள் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பி அவரோடுகூட ஐக்கியமாய் வாழவே விரும்புகிறார்.

இயேசு கிறிஸ்து, **தேவாலயத்திலே ஆடுகள், மாடுகள், புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டு பண்ணி, அவர்கள் யாவரையும், ஆடுமாடுகளையும், தேவாலயத்திற்கு புறம்பே துரத்தி விட்டு காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்**



**போட்டு, புறா விற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார்** (யோவான் 2:14-16). இயேசு கிறிஸ்து எல்லோரையும் நேசிக்கிறவர். ஏன் கொள்ளையடிப்பவர்களை நேசிக்காமல் சாட்டையால் துரத்தி விடுகிறார்? தன்னை சிலுவையில் அறைந்தவர்களிடமும், பரியாசம் பண்ணி அவரை அவமதித்தவர்களிடமும் கோபப்படாமல், பிதாவை நோக்கி இப்படியாக ஜெபித்தார்: **பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்** (லூக்கா 23:34). சற்று யோசித்து பாருங்கள், ஆலயத்தை வியாபார ஸ்தலமாக பயன்படுத்துவதை இயேசு கிறிஸ்து விரும்பவில்லை. பல நாடுகளிலிருந்து தேவனைத் தொழுதுகொள்ள வரும் ஜனங்களுக்கு, பலி செலுத்தும் மிருகங்களை அதிக விலைக்கு விற்று லாபமெடுக்கும் வியாபாரிகள்மேல் கோபமடைந்தார். காசுக்காரர் ஜனங்களை ஏமாற்றினார்கள். இயேசு கிறிஸ்து தவறு செய்தவர்களைத்தான் கண்டித்தார். அநேகர் சத்துருக்களையும் நேசிக்க வேண்டும் என்றும், தன்னைப்போல மற்றவர்களையும் நேசிக்க வேண்டும் என்ற வசனத்தைச் சொல்லிக் கொண்டும், ஜனங்களை ஏமாற்றி கொள்ளையடிப்பவர்களையும், தெய்வ பயமில்லாதவர்களையும், தேவனுக்கு எதிராக செயல்படுகிறவர்களையும், அவருடைய சித்தத்தின்படி நடக்காமல், தன் சுய இஷ்டத்தின்படி நடப்பவர்களையும் நேசிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேதவார்த்தையை தவறாக புரிந்து கொள்ளுகிறார்கள் . பாவத்தை வெறுக்க வேண்டும். பாவம் செய்தவர்களின் பாவத்தை கண்டித்து உணர்த்தி அவர்கள் மனந்திரும்பும்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்வதே அவர்களை உண்மையாய் நேசிப்பதாகும். சத்துருக்களையும் நேசிக்கவேண்டும், தன்னைப்போல பிறனையும் நேசிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு அவர்களது பாவத்தை உணர்த்தி மனந்திரும்ப வைத்து கர்த்தரண்டை அவர்களை நடத்தாமல் அவர்களோடு ஐக்கியமாய் இருப்பது தவறு. இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் செயல்படுபவர்கள். பாவிகளை தேவ னண்டை வரவிடாமல் தடுப்பவர்கள்; பாவிகளோடு ஒத்துப்போகிறவர்கள். வேதத்தை முழுமையாய் படித்து அறிந்து கொள்ளாமல், தங்களுக்கு தெரிந்த ஒரு சில வசனங்களையே சொல்லிக் கொண்டிருப்பவர்கள். கர்த்தர் எந்த சூழ்நிலையில் எதற்காக அந்த வசனத்தை சொல்லுகிறார் என்பதை கவனமாக படித்து அறிந்து கொள்ள வேண்டும். அப்படி அறிந்து கொண்டோமானால், எல்லா சூழ்நிலைக்கும் ஒரே வசனத்தையே சொல்லிக் கொண்டிருக்கமாட்டோம்.

யோசபாத் ராஜா கர்த்தரை உத்தமமாய் பின்பற்றி, அவருடைய கட்டளைகளின்படி நடந்தான் (2 நாளாகமம் 17:4). அவன் கர்த்தருக்கு விரோதமாய் நடந்து வந்த இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு ஐக்கியமாய் இருந்து, அவனோடு சம்மந்தங் கலந்தான். ஆகாபின் மகளாகிய அத்தாலி யாளை தனது மகனுக்கு திருமணம் செய்து வைத்தான். இதனால் கர்த்தருடைய கோபத்துக்குள்ளானான். யோசபாத்தின் மகன் இறந்தபோது, அத்தாலியாள் அரசியானாள். அவனது பரம்பரையில் ஒருவனைத் தவிர மற்ற யாவரையும்



கொலை செய்தாள். ஆகாபோடு சேர்ந்து யோசபாத் போருக்கு சென்றான். எதிரிகள் அவனைத் தாக்க வந்தபோது, கர்த்தரை நோக்கி கூப்பிட்டபோது, கர்த்தர் அவனை பாதுகாத்தார். யோசபாத் ஆகாபோடே சமாதானமாக இருக்க விரும்பினான். **அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக: நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?** (2 கொரிந்தியர் 6:14). எப்படி கிறிஸ்துவும் சாத்தானும் உடன்பாடு கொள்ள முடியும்? கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்காமல் இருப்பவர்களோடு நாம் சேரக்கூடாது. அவர்களோடு ஐக்கியமாய் இருக்கக்கூடாது. அவர்களை நேசித்து, அவர்கள் கர்த்தரண்டை வர அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

### வேதபாரகர், பரிசேயரை கண்டித்தல்



இயேசு கிறிஸ்து, வேதபாரகரையும் பரிசேயரையும் இப்படியாக கண்டித்தார்: **மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! என்றும், குருடரான வழிகாட்டிகளே, மதிகேடரே, குருடரே, குருடரான பரிசேயனே, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே என்றும் கண்டிக்கிறார்** (மத்தேயு 23-ம் அதிகாரம்). சத்துருக்களையும் நேசியுங்கள் என்று கூறும் கர்த்தர் இவர்களை மன்னித்து நேசிக்க வேண்டியது தானே? ஏன் இவர்களை இப்படி கடுமையான சொற்களால் கண்டிக்கிறார்? சிந்தித்துப் பாருங்கள்.

மற்றவர்கள் தன்னை மிகவும் நல்லவன், பக்தியுள்ளவன் என்று நினைக்கவும், பாராட்டவும் வேண்டும் என்பதற்காக நடிப்பவனே மாயக்காரன். பரிசேயரும், சதுசேயரும் மாய்மாலக்காரர்களாயிருந்தார்கள். வேதத்தை நன்கு அறிந்து வைத்திருந்த வேதபாரகர்கள் நியாயப்பிரமாணத்தின்படி நடக்க வேண்டும் என்று கருத்தாயிருந்தார்கள். இவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு எதிராக செயல்பட்டார்கள். பரிசேயர்கள் தாங்களாக சட்டங்களுக்கு விளக்கம் அளித்து பாரம்பரியங்களை உண்டாக்கினர். இதனால் தேவனுடைய கட்டளைகளைக் காட்டிலும், பாரம்பரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேவனை சடங்காச்சாரமாக பின்பற்றினார்கள். தங்களது வழியே சரியானது என்ற எண்ணமுடையவர்களாயிருந்தார்கள்.

வேதபாரகரும், பரிசேயர்களும் தேவனுடைய சட்டங்களை நன்றாக உபதேசிக்கிறவர்களாயிருந்தார்கள். மக்கள் பின்பற்றி நடப்பதற்குக் கடினமான சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தினார்கள். ஆனால், அவர்கள் அதைப் பின்பற்ற மாட்டார்கள். மற்றவர்கள் பார்க்கும்படியாக, அவர்கள் முன்னிலையில் தர்மத்தை செய்வார்கள். மற்றவர்கள்

தங்களை புகழவேண்டும் என்பதற்காக பிறருக்கு உதவி செய்வார்கள். பிறருக்கு உதவி செய்வதற்கு முன்பே குழல் ஊதி விளம்பரப்படுத்துவார்கள். மற்றவர்கள் தங்களை மதிக்கவேண்டும் என விரும்புவார்கள். அவர்கள் ஜெபம் பண்ணுவதை மற்றவர்கள் காண விரும்புவார்கள்.

**மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை** (மத்தேயு *23:13*). இவர்கள் இயேசு கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் தேவனைப் பற்றி அறிகிற அறிவில் வளராமல், பாரம்பரியத்தையும், சடங்காச்சாரத்தையும் பின்பற்றுவதால், தேவனுடைய ராஜ்யத்திற்குள் அவர்களும் வராமல், அதற்குள் நுழைய முயற்சிக்கும் மற்றவர்களையும் நுழைய விடமாட்டார்கள். இவர்கள் பணத்தின் மேலும், பதவியின் மேலும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையிலும் இருக்க மிகவும் விரும்பினதினால், தேவனை காண தவறினார்கள். பணஆசையும், அதிகாரமும், பதவியின் மேல் இருந்த அதிக ஆசையும், தேவனைப் பார்க்கவும், அவரோடுகூட உள்ள ஐக்கியத்தையும் இழக்க வைத்தது. மாயக்காரரும், சுயநீதியை உடையவர்களும், வெளியே சுத்தமாக காணப்பட்டார்கள். அவர்கள் உள்ளமோ சுத்திகரிக்கப்படாமல் இருந்தது. மதச் சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் உண்டாக்கி தேவனை பின்பற்றுவதை முழுமையாக விட்டு விட்டார்கள். தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறோம் என்று சொல்லி, வருமானத்தில் பத்தில் ஒருபங்கை கர்த்தருக்கு கொடுத்தார்கள். ஆனால், மற்றவர்களுக்கு இரங்காமல், உதவி செய்யாமல், நியாயஞ்செய்ய, மனதில்லாமல், ஒருவருக்கொருவர் நம்பிக்கைக்குரியவர்களாக இல்லாமல், நேர்மையற்றவர்களாக இருந்தார்கள். உதவியற்றவர்களிடமிருந்து பொருட்களை வஞ்சகமாக அபகரித்தார்கள்.

கர்த்தர் அவர்களை நோக்கி: **பரிசேயராகிய நீங்கள் போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும், பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது** (லூக்கா *11:39*). பரிசேயர்கள், சடங்காச்சாரத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார்கள். உடலை சுத்தமாக வைத்துக் கொண்டார்கள். உள்ளமோ பாவத்தினால் நிறைந்திருந்தது. பார்ப்பதற்கு பரிசுத்தவான்களைப்போல, மிகவும் நல்லவர்களைப்போல நடித்து உள்ளத்தில் பகைமையையும், வஞ்சகத்தையும், மாயத்தையும், அக்கிரமத்தையும் வைத்திருந்தார்கள். பேராசையினால், மற்றவர்களை ஏமாற்றி கொள்ளையடித்து, தங்கள் மனவிருப்பத்தின்படி ஆஸ்திகளையும், பணத்தையும் சேர்த்தார்கள். தேவ அன்பு அவர்களுக்குள் இல்லாததால், தன்னைப்போல மற்றவர்களையும் நேசிக்காமல் இப்படியாக நடந்து கொண்டார்கள். வெளிப்புறம் சுத்தமாக தோன்றச் செய்ய முக்கியத்துவம் கொடுப்பதைவிட, உள்ளம் புதுப்பிக்கப்படுவதே நமது



நோக்கமாயிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து, நல்லவர்கள்போல நடித்து மாய்மாலம் பண்ணுவதை வெறுக்கிறார்.

கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களுக்கு எதிராக செயல்படுகிறவர்களையும், எதிர்த்து பேசி அவர்களுக்கு எதிராக நிற்பவர்களையும் பார்த்து இயேசு கிறிஸ்து இப்படியாகக் கண்டிக்கிறார்: **சர்ப்பங்களே, விரியன் பாம்புகுட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்புவித்துக்கொள்வீர்கள்?** (மத்தேயு *23:33*). இவர்கள் தேவனுடைய கோபத்திலிருந்து தப்பமுடியாது. குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு நரகத்திற்கு செல்வார்கள். யேசபேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்தபடியால், கர்த்தருடைய கோபம் அவள்மேல் வந்தது. அவளது உடல் அடக்கம் பண்ண முடியாமல் சிதைந்து



போனது. நாய்கள் அவளது உடலை தின்றது. நாம் அப்படியாக இருக்கக்கூடாது.

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, மறுபடியும் பிறக்கும்போது, தேவனுடைய ராஜ்யத்திற்குள் வந்து விடுகிறோம். நாம் பரிசுத்த ஆவியானவரை கேட்டு பெற்றுக் கொள்ளும்போது, ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறார். அவர் நம்மை நீதியின் பாதையில் நடத்துவார். நாம் பெற்ற இரட்சிப்பை மற்றவர்களும் பெற்றுக் கொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும். மற்றவர்களையும் இரட்சிப்பிற்குள் நடத்த வேண்டும். நற்செயல்களைச் செய்பவர்களாக மாறவேண்டும். உண்மை பேசுவதோடு, வேதத்தின் உண்மைகளை சரியாக பேசவேண்டும். நியாயஞ்செய்து மற்றவர்களுக்கு இரங்கி, மனத்தாழ்மையாய் நடந்து கொள்ள வேண்டும்.

அநேகர் சத்துருக்களை சிநேசிக்க வேண்டும் என்று சொல்லி, அவர்களோடுகூட ஐக்கியமாயிருப்பார்கள். அவர்களுக்குப் பிரியமாய் நடந்து, பிரியமாய் பேசி, அவர்களுக்கு பல வெகுமதிகளைக் கொடுத்து சந்தோஷப்படுத்துவார்கள். தங்களை மிகவும் நல்லவர்களைப்போல காட்டிக் கொள்வார்கள். அவர்கள் தங்களை பெரிதாக பார்க்க வைப்பார்கள். இயேசு கிறிஸ்துவை பார்க்க வைக்கமாட்டார்கள். அவர்களிடம் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லி, அவர்களை மனந்திரும்ப வைத்து, இயேசுவண்டை நடத்தமாட்டார்கள். பிரதான தூதனாயிருந்த சாத்தானும், பெருமை கொண்டு, தேவனைவிட தன்னை பெரிதாக நினைத்ததால்தான் அவனைத் தேவன் கீழே தள்ளினார். சத்துருக்களை உண்மையாய்

சிநேகிப்பது என்பது அவர்களை கர்த்தரண்டை நடத்துவதே.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு இரட்சிப்பின் மேன்மையைப் பெற்று, ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறவர்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அதன்படி வாழ்வார்கள். இவர்களுக்கு சத்துரு யாரென்றால், இரட்சிக்கப்படாமல், ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளாமல் சுயவிருப்பத்தின்படி உலகத்தை நேசித்து வாழ்பவர்கள், இருளின் பிள்ளைகள், சாத்தானின் பிடியில் இருப்பவர்கள். இவர்களே, கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராக செயல்படுபவர்கள்.

**ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே** (மத்தேயு 10:36). இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்பவர்களும், அவரை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பவர்களும் குடும்பத்திலும், சபையிலும் இருப்பார்கள். அவரை ஏற்றுக் கொண்டவர்களை மற்றவர்கள் துன்பப்படுத்துகிறார்கள். **எப்படியெனில் மகனுக்கும், தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்** (மத்தேயு 10:35). குடும்பத்து மக்களே ஒருவருக்கொருவர் எதிராவார்கள். கர்த்தரைவிட தன் தகப்பனையும், தாயையும், மகனையும், மகளையும் அதிகம் நேசிக்கிறவன் கர்த்தரை பின்பற்றுவதற்கு பாத்திரனல்ல. இயேசு கிறிஸ்து குடும்பத்தில் ஒருவருக்கொருவர் உள்ள உறவுகளை குறிப்பிடவில்லை. அவருடைய ஸ்தானத்தில் மற்றவர்களை வைக்கக்கூடாது என்றார். உலகத்திலும் அதிலுள்ளவைகளிலும் பிணைக்கப்பட்டிருக்கக் கூடாது. அப்படிப்பட்டவனிடத்தில் தேவனுடைய அன்பு இல்லை. **உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை** (1 யோவான் 2:15). நம்மு டைய ஆசை தேவன் மீது இருக்கிறதா? அல்லது மனிதர்கள், பணம் பொருட்கள், பதவி படிப்பின் மீது இருக்கிறதா? உலகத்திலும் உலகத்திலுள்ள மனிதர்களிடத்திலும் நெருங்கிய பழக்கத்தோடிருப்பது, தேவனிடம் நமக்குள்ள உறவின் முக்கியத்துவத்தைக் குறைத்துப் போடும் இந்த உலகத்தின் மேல் சிநேகம் வைத்ததன் பலனாக குடும்பத்திலுள்ள நபர்கள் நிச்சயமாக ஒருவரை விட்டு ஒருவர் விலகியிருக்கும்படியாக செய்துவிடும். கிறிஸ்துவுக்காக நமது நேரத்தையும் கவனத்தையும் செலுத்த ஆயத்தமாயிருக்கும்போது, நம் நண்பர்களிடமிருந்து நமக்குப் பிரியமானவர்களிடமிருந்து நம்மை பிரித்து, தொடர்பற்ற வர்களாக்கிவிடும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தமக்கென தெரிந்து கொண்டு மற்ற ஜனங்களை விட்டு பிரித்தெடுத்து பரிசுத்தப்படுத்தினார். வேதத்திலே பரிசுத்தம் என்ற வார்த்தை இரண்டு காரியங்களைக் குறிப்பிடுகிறது. ஒன்று பாவமில்லாத பரிசுத்தம். இரண்டாவது, கர்த்தர் தமக்கென பிரித்தெடுப்பது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை இன்னின்ன ஜனங்களோடு கலவாதிருங்கள் என்று கட்டளையிட்டார். கானான் தேசத்திற்குள் செல்லும்போதுகூட,



அங்கு ஏற்கெனவே இருக்கும் ஜனங்களை அழிக்கச் சொல்லுகிறார். சவுலின் காரியத்தில்கூட அவர் அமலேக்கியரை முழுமையாக அழிக்கச் சொல்லியும், அவன் அழிக்காதபோது கோபப்படுகிறார். அதேபோல இன்றும், தம்முடைய இரத்தத்தை சிந்தி மீட்டுக் கொண்ட தம் பிள்ளைகளை பாவிகளுக்கு விலகியிருக்கச் சொல்லுகிறார். (சங்கீதம் 1:1). (துன்மார்க்கனுக்கு, பாவிகளுக்கு, பரியாசக்காரருக்கு) **தாம் பரிசுத்தமாய் இருப்பதுபோல தம்முடைய பிள்ளைகளும் பரிசுத்தமாயிருக்க விரும்புகிறார்** (1 பேதுரு 1:16). பாவிகளை அழிக்க அல்ல பாவிகள் மனந்திரும்ப வேண்டுமென்பதே தேவசித் தம். நாமும்கூட பாவிகளை மனந்திரும்பும் படி அறிவுறுத்த வேண்டுமேயொழிய, அவர்களுக்கு ஒத்திருக்கக்கூடாது. அந்த ஆத்துமா பரலோகம் செல்வதற்கு நாம் உதவியாய் இருக்க வேண்டும்; நரகம் செல்வதற்கு உதவியாயிருக்கக்கூடாது. அந்த ஆத்துமாவுக்கு நாம் கர்த்தரிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். சத்துருவை உண்மையாய் நேசித்தோமானால், அந்த ஆத்துமா மனந்திரும்புவதற்கு நாம் உதவியாயிருப்போம். நாம் சுயமாக நிற்கக்கூடாது. வேதம் சொல்லுவது ஆலோசனையல்ல கட்டளை. இன்று அநேகர் வேதம் சொல்லுவதை ஆலோ சனையாகவும், யோசனையாகவும் அதை கட்டளை என்று பார்க்க மறந்து போகிறார் கள்.

### துன்பத்தின் நடுவிலும் அன்பு

கஷ்டமான, போராட்டமான, நெருக்கடியான நேரங்களிலும்கூட அன்பை விட்டு விடாதே என்று கர்த்தர் நம்மிடம் சொல்லுகிறார். சாத்தான் யோபுவை கஷ்டப்படுத்துகிறான். தன்னுடைய கஷ்டங்களைப் பார்த்து யோபு, கர்த்தரை நேசிப்பதை விட்டு விட வேண்டுமென்பதே சாத்தானின் திட்டமாகும். யோபு தன்னுடைய பிள்ளைகளையும் உடைமைகளையும் இழந்து போகிறான். உச்சிமுதல் உள்ளங்கால்வரை பருக்களால் வாதிக்கப்படுகிறான். இவை எல்லாம் சம்பவித்தபோதும் யோபு கர்த்தரை நேசிப்பதை விட்டுவிடவில்லை. கர்த்தர் சாத்தானிடம், என் பிள்ளை யோபு என்னை எவ்வளவாய் நேசிக்கிறான் என்று சவால் விட்டார். கர்த்தர் தன்னை ஆசீர்வதித்தாலும், ஆசீர்வதிக் காவிட்டாலும், அவரை நேசிப்பேன் என்று சாட்சியாய் யோபு வாழ்ந்து காண்பிக்கிறான். இதையே அவன், கர்த்தர் என்னை கொன்று போட்டாலும், கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்றும், கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் என்றும் நிர்வாணியாய் வந்தேன். நிர்வாணியாய் போவேன் என்றும் சொல்லி, கர்த்தர் மேல் தான் வைத்துள்ள அன்பை வெளிப்படுத்துகிறான். இப்படிப்போல அவனுடைய நண்பர்கள் இல்லை என்று கர்த்தர் குறிப்பிடுகிறார். நாமும் யோபுவைப்போல கர்த்தரை முழு இருதயத் தோடும், முழுமனதோடும் நேசிக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய வாஞ்சையாகும்.

**கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்** (சங்கீதம் 4:4). நம்முடைய கோபத்தினிமித்தம் அன்பை விட்டுவிடக்கூடாது என்று கர்த்தர் வலியுறுத்துகிறார். நம்முடைய சூழ்நிலையின் நெருக்கடியின் நிமித்தம், நமக்கு கோபம், எரிச்சல், மூர்க்கம் வரலாம்.

இப்படிப்பட்ட மாம்சத்தின் கிரியைகளினால், அன்பை நாம் இழக்க நேரிடும். ஆவியும், மாம்சமும், ஒன்றுக் கொன்று விரோதமானது என்று கர்த்தர் சொல்லுகிறார் (கலாத்தியர் 5:17). நம்முடைய இருதயத்தில் ஆவியாய் இருக்கிற அன்பை, நம்முடைய புறம்பான மாம்சத்தின் கிரியைகளினால் இழந்துவிடக்கூடாது என்று கர்த்தர் வாஞ்சிக்கிறார். கிறிஸ்தவ ஜீவிதம் என்பதே அன்புதான். இயேசு கிறிஸ்துவை எல்லா மதங்களுக்கும், தத்துவங்களுக்கும், கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டு ஜனங்கள்நேசிப்பதற்கு காரணமே, தம்மை துன்பப்படுத்துகிறவர்களையும் இயேசுகிறிஸ்து நேசித்ததே காரணம். ஒரு பூவை நசுக்கும்போது, அது மணம் வீசும். அப்படிப்போல இயேசுவை அடித்து நொறுக்கியபொழுது அவரிடத்திலிருந்து அன்பு வெளிப்பட்டது. இயேசுகிறிஸ்து நம்மை எவ்வளவாய் நேசித்தார் என்பதற்கு அடையாளம், அவரது காயங்களும், அவர் சிந்திய இரத்தமுமே. நாமும் எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் அன்பை விட்டுவிடாதிருப்போம்.

### ஊழியத்தில் வெற்றி காண வழி

ஒரு ஊழியத்தின் வெற்றிக்கான வழி அன்பே. கர்த்தருடைய ஊழியக்காரன் என்று சொல்லப்படுபவன், கர்த்தருடைய அன்பை வெளிப்படுத்துகிறவனாக இருக்கவேண்டும். கர்த்தரை யார் அதிகமாய் நேசிக்கிறார்களோ, அவர்கள்தான் கர்த்தருடைய ஊழியத்தை வாஞ்சையோடு செய்வார்கள். ஒரு ஊழியக்காரனுடைய தனிப்பட்ட பேச்சு, பிரசங்கம், நடத்தை எல்லாம் இயேசு வின் அன்பை ஜனங்களுக்கு குறிப்பிட்டு காண்பிப்பதாக இருக்க வேண்டும். இயேசு தரும் ஆசீர்வாதங்களைக் காட்டிலும், இயேசுவை அதிகமாக நேசிக்க ஜனங்களுக்குக் கற்றுத்தர வேண்டும். அப்போஸ்தலனாகிய யோவான் எழுதின சுவிசேஷம் 16:24ல் இதுவரை நீங்கள் ஒன்றும் கேட்க வில்லை என்று கர்த்தர் குறிப்பாய் சொல்லுவது அவரையே கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே. அவர்தரும் ஆசீர்வாதங்களை அல்ல. அவரை நாம் நேசிக்க வேண்டும். அதற்கு இணையாக மற்ற மனிதர்களையும் நாம் நேசிக்க வேண்டும். அதிலும் முக்கியமாக நம்மை துன்பப்படுத்துகிறவர்களையும் நாம் நேசிக்க வேண்டும். இது இடுக்கமான வழி, கடினமானது. இப்படிப்பட்ட இடுக்கமான வழியேதான் நாம் பரலோகம் செல்ல முடியும். இந்த பூமியில் நாம் வாழும் வாழ்க்கையே பரலோகத்திற்கு செல்வதை நிர்ணயிக்கிறது. சத்துருவையும் நேசிப்பதே பரலோகத்திற்கான வழி. நம்முடைய சத்துருவும் பரலோகத்திற்கு நம்மோடு கூட வரவேண்டும்.

### எதற்கு மன்னிப்பு இல்லை

**மனுஷன் செய்யும் எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும். பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பேசுவது, மன்னிக்கப்படுவதில்லை** (மத்தேயு 12:23). ஒருவனை கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கும்பொழுது, அவன் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்படுகிறான். அவன் தேவன் வாழும் ஆலயமாகிறான். இயேசு அவனுக்குள் வாழ்கிறார் (1 கொரிந்தியர் 13:5). பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு ஒருவன் பேசும்போது, அல்லது நடக்கும்போது, அவன் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறவனாக இருக்கிறான். அப்படி அவன் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்பொழுது, யாரேனும் அவனை எதிர்த்து நின்றால், அது பரிசுத்த ஆவிக்கு விரோதமான காரியம் ஆகும். இயேசுகிறிஸ்துவை எதிர்த்து நின்றவர்களை இயேசு கிறிஸ்து மன்னித்தார். ஆனால், இயேசு கிறிஸ்துவின் ஆவியினால் நிரப்பப்பட்டவனை எதிர்த்து நின்றால், அதை தாம் மன்னிப்பதில்லை என்று சொல்லுகிறார். அவர் தம்முடைய பிள்ளைகள் மீது வைராக்கியமாக உள்ளார். **உன்னைத் தொடுகிறவன் என் கண்ணின் மணியைத் தொடுகிறான்** என்று சொல்லுகிறார். கர்த்தர் சவுலை அபிஷேகித்து ராஜாவாக்கினார். அந்த அபிஷேகத்தினிமித்தம் கடைசிவரை தாவீது அவனை எதிர்த்து நிற்கவில்லை. தாவீதின்மேல் சவுல் பொறாமைகொண்டு, அவனை பல தடவைகள் கொல்ல முயற்சித்தான். ஆனால், தாவீது சவுலிடம் நீர் கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவர். உம்மீது கைபோடுவதில்லை என்று கூறினான்.

ஒருவனை நாம் பார்க்கும்போது, அவர்கள்மீது கர்த்தர் வைத்திருக்கிற அன்பையும், கிருபையையும், அவர்கள் மேல் இருக்கும் அபிஷேகத்தையும் பார்க்க வேண்டும். அப்போஸ்தலர் 5-ம் அதிகாரத்தில் அனனியா, சப்பீராள் அப்போஸ்தலனாகிய பேதுருவிடம், தங்களுடைய நிலத்தை இவ்வளவு பணத்துக்குத்தான் விற்றோம் என்று பொய் சொன்னார்கள். அவர்கள் பேதுருவை பார்த்தார்களேயொழிய அவனுக்குள்ளிருந்த பரிசுத்த ஆவியானவரைக் காணத் தவறினார்கள். நாம் இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நம்முடைய சத்துருவிடம் அன்பு கூர்ந்து, இயேசுவண்டை நடத்துவோம். ஆமென்!


**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**



**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா






# தேவ சித்தம் ③

பாஸ்டர்

**தே**வனுடைய சித்தத்தின் மையத்தில்தான் மெய்யான ஆசீர்வாதம் இருக்கிறது. அதை நாம் பெற்றுக்கொள்ளவே தேவன் விரும்புகிறார். தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வது கடினமான காரியமல்ல. பரிசுத்த வேதாகமும், அபிஷேகமும் தேவ சித்தத்தை வெளிப்படுத்தவே. எல்லா காரியங்களையும் கற்றுக் கொடுக்கவே நமது குரு (அடோனாய்) விரும்புகிறார்.

இரவும், பகலும் வேதத்தை வாசிக்கும்போது, கர்த்தருக்குப் பிரியமானது, பிரியமில்லாதது இவைகள் நமக்குத் தெரிய வரும். எவ்வளவு அதிகமாய் வேதத்தை படிக்கிறோமோ அவ்வளவு அதிகமாய் தேவ சித்தத்தை துல்லியமாக அறியலாம். முக்கியமானதொரு காரியம், அபிஷேகத்தின் மூலம் படிக்கவேண்டும்.

நமது அறிவின்படியோ, கண் முன்பாக நடக்கும் காரியங்களை வைத்தோ, நமது கடந்த கால அனுபவங்களை வைத்தோ தேவ சித்தத்தை நாமாக கணிக்கக்கூடாது. பரிசுத்த ஆவியானவர், வேதத்தின் வார்த்தையைக்கொண்டு நம் உள்ளத்தில் பேசவேண்டும். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகக் குறிப்பிடுகிறார்: அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரிய வைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் (1 கொரிந்தியர் 2:13).

தேவ சித்தத்தை ஒரு மனுஷன், தானே அறிந்துகொள்ள, முதலாவது இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது, பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டிருக்க வேண்டும். மூன்றாவது, கர்த்தருடைய ஆவியானவரின் உணர்த்துதலை துல்லியமாக உணர வேண்டும். மனது சொல்வதையும், மனசாட்சி சொல்லுவதையும், உள்ளுணர்வு சொல்லுவதையும், பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளுணர்வின் மூலம் உணர்த்துவதையும் சரியாகக் கவனிக்க பழக வேண்டும். இதுவே தியானமாகும். அநேகர் தங்களுடைய உறுதியான உணர்ச்சியை தேவ சித்தமாக எடுத்துக் கொள்கிறார்கள். இது ஆத்துமாவில் (மனதில், உணர்ச்சியில்) தோன்றுவதாகும். கர்த்தர், நமது ஆவியில்தான் (இருதயத்தில்) உணர்த்துதலின் மூலம் வெளிப்படுத்துவார்.

தேவ சித்தம், மனுஷனை பிரியப்படுத்துவதாகவோ, மகிமைப்படுத்துவதாகவோ இருக்காது. அது தேவனை பிரியப்படுத்துவதாகவும், மகிமைப்படுத்துவதாகவும் இருக்கும். அதற்குள் மனுஷனுக்குப் பிரியமானது இருக்கும். மனுஷனுக்கு விரோதமானதோ, பிரியமில்லாததோ தேவ சித்தத்தில் இருக்காது.



நமது மனித அறிவும், ஞானமும், பரம தகப்பனுடைய அறிவிற்கும், ஞானத்திற்கும், முன்பாக குறைவுள்ளதே. தேவன், நம்மை உருவாக்கினபொழுது ஒரு தரிசனத்தோடு உருவாக்கியுள்ளார். அதை நமக்கு அவர் மறைத்து வைக்கவில்லை. வேதம், அபிஷேகம், தரிசனம், சொப்பனம், தீர்க்கதரிசனம் மூலம் வெளிப்படுத்துகிறார்.

தேவனை அறியாதவர்கள், தேவ சித்தத்தை அறிந்து கொள்ளாமலே நன்றாக வாழ்கிறார்களே என்று நீங்கள் நினைக்கலாம். அது பரிபூரணமான சமாதானமில்லாத வாழ்க்கை. எப்போது கலக்கம், குழப்பம், சரிவு வரும் என்று தெரியாமல் ஓடுகின்றதொரு வாழ்க்கை. அவர்களுக்கு தமது வாழ்க்கையைப் பற்றிய சரியான கண்ணோட்டம் இருக்காது. அவர்களது வாழ்க்கையில் திடீரென்று உயர்வு வரும், திடீரென்று சரிவு வரும். எப்போது எது நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. விபத்தை அறியாது ஓடுகின்ற ஒரு வாகனத்தைப் போன்றது அவர்களது வாழ்க்கை. ஆனால், தேவ சித்தத்தை அறிந்து, அதின்படி நடக்கும்போது, நமக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பு இருக்கும். தற்பொழுது நமது வாழ்க்கையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்ற தெளிவு இருக்கும். எந்த திசை நோக்கி நமது வாழ்க்கை சென்று கொண்டிருக்கின்றது என்ற நிச்சயம் நமக்குள் இருக்கும். தடைகள், விபத்துகள் நடக்கும்போதும், நமக்குள் தடுமாற்றம் வராது. நிதானம் இருக்கும். தேவனுடைய சித்தப்படிதான் என் வாழ்க்கையில் எல்லாக் காரியங்களும் நடக்கும், எனது தலையிலிருந்து ஒரு முடி விழ வேண்டுமானால்கூட தேவ சித்தத்தின் படிதான் நடக்கும் என்ற முழுமையான நிச்சயம் நமக்குள் இருக்கும். அதினால், நமக்குள் தெய்வீக சமாதானம் (கொலோசெயர் 3:15) இருக்கும்.

தேவ சித்தத்தின்படி நடக்கும்போது, நாம், மற்றவர்களுடைய (சக மனிதர்களுடைய) வாழ்க்கையை ஒப்பிட்டு பார்க்கமாட்டோம். நமக்கும், கர்த்தருக்குமிடையே ஆழமான, துல்லியமான உறவு இருக்கும். ஒரு நண்பனுடன் பேசுவது போல கர்த்தர் நம்மோடு பேசுவார். ஒரு குருடனை வழி நடத்துவதுபோல, நம்மை வழி நடத்துவார். நமக்கு ஒவ்வொரு அடியையும் சொல்லித் தருவார். ஏனென்றால், என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தம்போல என்னை நடத்தும் என்று நாம் கேட்டு, அவரிடம் நம்மை முழுமையாக அர்ப்பணிப்பதினாலே.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம், குஷ்டரோகியொருவன், சித்தமுண்டானால் சுத்தமாக்கும் (மத்தேயு 8:2,3) என்று கேட்கிறான். சித்தமுண்டு, சுத்தமாகு என்கிறார். உடனே அவன் சொஸ்தமாகிறான். ஆம், அவனை சுகப்படுத்துவதே அவருக்குப் பிரியம். இஸ்ரவேலை (நம்மை) ஆசீர்வதிப்பதே அவருக்குப் பிரியம் (எண்ணாகமம் 24:1). கர்த்தர், அவருடைய பிள்ளைகளாகிய நம்மேல் வைத்திருக்கிற அன்பு உண்மையானது, பரிசுத்தமானது. மற்ற மனுஷர்கள் மேலும், நம்முடைய தாலந்துகள், பதவி, படிப்பின்மேலும் நம்பிக்கை வைக்க வேண்டாம், அது சாபம் என்கிறார் கர்த்தர். கர்த்தர்மேல் நம்முடைய நம்பிக்கையை வைக்கச் சொல்கிறார். அதுவே ஆசீர்வாதம் என்கிறார் (எரேமியா 17:5-8). இதுவே கர்த்தர் தமது சித்தத்தை வெளிப்படுத்தும் விதமாகும். நாம் செய்யப்போகும் எந்தக் காரியத்திலும் இது அடிப்படை அஸ்திபாரமாக இருக்கின்றதா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். மனுஷனை நம்பி செய்வது தேவ சித்தமல்ல. கர்த்தரை நம்பி செய்வதே தேவ சித்தமாகும்.